# முதியோர் இல்லத்தில் ஒரு நாள்

சூரியன் தன் எழில் மிகுந்த ஒளிக்கதிர்களை இவ்வுலகிற்குப் பரப்பிக் கொண்டிருந்தான். வெப்பம் மிகுந்த ஒளிக்கதிர்கள் என் கண்களைக் கூசச் செய்தன. நான் தூக்கம் கலையாமல் எழுந்தேன். ஆனால், அருகிலிருந்த நாள்காட்டியைப் பார்த்தவுடன் நான் புத்துணர்ச்சியுடன் செயல்பட ஆரம்பித்தேன். அன்று நானும் என் பள்ளி நண்பர்களும் ஒரு முதியோர் இல்லத்திற்குச் செல்வது என்றும் அங்கேயே எல்லோரும் சந்திப்பது என்றும் முடிவெடுத்திருந்தோம். அதனால், நான் அவசர அவசரமாக என் காலைக்கடன்களை முடித்துவிட்டு முதியோர் இல்லத்திற்குச் செல்வதற்கான பேருந்து நிறுத்தத்திற்கு விரைந்தேன்.

பேருந்து வந்தவுடன் அதில் ஏறி அமர்ந்தேன். பின் நான் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினேன். நாம் பிறந்ததிலிருந்து வளர்ந்து பெரியவர்கள் ஆகும் வரை நம்மைக் கவனித்துக் கொள்வது நம் பெற்றோரின் கடமை. அதேபோல் அவர்கள் முதியவர்களானவுடன் அவர்களைக் கவனித்துக் கொள்வது நமது கடமையாகும். இப்படியிருந்தும் பலர் வளர்ந்து பெரியவர்களானதும் தங்கள் வயதான பெற்றோரை மகிழ்ச்சியாக வீட்டில் வைத்துக் கவனிக்காமல் அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி விடுகின்றனர். தாங்களும் ஒரு காலத்தில் முதியவர்கள் ஆவோம் என்பதை இவர்கள் மறந்து விடுகின்றனர். அந்த நினைவிருந்தால் அவர்கள் நிச்சயமாக இதுபோல் செய்யமாட்டார்கள் முதியோர் இல்லங்களைக் கட்ட வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது.

இப்படி நான் யோசித்துக் கொண்டிருக்கும்போதே நான் இறங்க வேண்டிய பேருந்து நிறுத்தம் வந்தது. நான் கீழே இறங்கிவிட்டு முதியோர் இல்லத்திற்கு விரைந்தேன். அங்கே என் நண்பர்கள் அனைவரும் இருந்தனர். பின் நாங்கள் அனைவரும் அங்கிருந்தவர்களுக்கு முன்பே வாங்கி வைத்திருந்த பொருள்களை அவர்களிடம் கொடுத்தோம். அவர்களைச் சந்திக்க வந்த எங்களைக் கண்டவுடன் அவர்களின் முகங்களில் மகிழ்ச்சி பொங்கியது. அவர்களுக்காக நாங்கள் பல ஆடல் பாடல் நிகழ்ச்சிகளையும் நடத்தினோம். முதியவர்கள் அனைவரும் தங்கள் வேதனையை மறந்து எங்களுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். பின் நாங்கள் அந்த முதியோர் இல்லத்தைச் சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டோம். அதன் பின்னர் நாங்கள் அங்கிருந்தவர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தோம். முதியோர்கள் அனைவரும் எங்களிடம் மனம் திறந்து பேசினர். மதிய வேளை வந்தது. நாங்கள் அனைவரும் அங்கிருந்தவர்களோடு ஒன்றாகச் சேர்ந்து மதிய உணவை உண்டோம். அதன்பின், சில விளையாட்டுகளை விளையாடினோம். மாலை நேரம் நெருங்கியது. நாங்கள் அனைவரும் புறப்படத் தயாரானோம். முதியோர்களின் கண்களில் மறுபடியும் ஏக்கம் தெரிந்தது. இருந்தாலும் அவர்கள் எங்களை மகிழ்ச்சியோடு வழியனுப்பினர்.

அந்த முதியோர் இல்லத்தின் நிர்வாகத்தினர் எங்களிடம் அவர்களைக் காண வந்ததற்கு நன்றி கூறினர். நாங்கள் அவர்களிடமிருந்து விடைபெற்று வீடு திரும்பினோம்.

அடுத்த முறையும் இதுபோன்ற இடங்களுக்குச் சென்று சமூகச் சேவை செய்ய வேண்டும் என்று நான் முடிவு எடுத்தேன்.

**ரா. சாரதா**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**
**மெக்பர்சன் உயர்நிலைப்பள்ளி**